நாள் – 27.08.2024 CC.268/2021

அ.சா.3 அழகர், த–பெ பழனிராஜ்

கு.ப.ம.எண். 2718/2023 , நாள் 08.08.2023 மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அ.சா.3 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் B.A., படித்துள்ளேன். மீனாவும், எனது மனையும் நெருங்கிய உறவு முறை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் கார் ஒன்று வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் சதீஷ் குமார் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். விபத்து நடந்த சமயத்தில் எந்த பள்ளியில் பணிபுரிந்து வந்தார் என்றால் சர் சிவசாமி மேல்நிலைப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி ஆகும். என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். சம்பவம் நடைபெற்ற அன்று 11.00மணியளவில் காவிரி ஆற்று அருகில் விசாரணை செய்தார்கள். என்னை விசாரணை செய்த போலீசாரின் பதவி தெரியாது.

2) நான் உறவுக்காரர் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றாலும், நான் மருத்துவமனைக்குத்தான் நேரடியாக சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு கார்தான் காரணம் என்றும், அந்த கார் நிற்காமல் சென்றதால் எதிரியின் கார் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. இழப்பீடு வாங்க வேண்டும் என்ற காரணத்திற்காக ஆஜர் எதிரி மீது பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.